உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பி ர தி வி லை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ  அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 430. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.  தொலைபேசி: 356

புத்-அரு] யாழ்ப்பாணம்:- பிரமாதீச ஞு கார்த்திகைமீ கரு - உ [illegible] வெள்ளிக்கிழமை (30-11-1973) [இல: நஉ

# ஈழம் எமக்கு ஈந்த

## இணையிலா ஏந்தல் ஸ்ரீ இராமநாதன்

### வள்ளலின் நினைவு மக்களது உள்ளங்களில் என்றும் நிலைபெறும்

அரசியல் மேதையாய், அருஞ்செயல் வீரனாய், அ ர ச வை அங்கத்தவராய், சட்டநூல் வல்லுநராய், கல்வித்திட்டந் தந்த கலைஞனா[illegible] க வி ன் பெ று கல் லூரிகள் அமை[illegible]பித்து எழுத்தறிவித்த ஏந்தலாய், நாவன்மை படைத்த நல்ல சொற்பெருக்குச் சிகாமணியாய் தேசாபிமா னச் செம்மலாய் மொழி — மதம் முத லியனவற்றில் முழு அபிமானியாய் எல் லாவற்றிலும் மேலாகக் கருவிலே பெரு மகனாய் விளங்கிய 'ஈ ழ த் து ம ணி' இராமநாத வள்ளல்.



இப் பெரும் உத்தமரின் ஞாபக நாள் (30-10-73) இன்றாகும். இந் நாட்டில் மட்டுமன்றி ஏனைய தேசங் கள் எங்கணும் பெயரும் புகழும் பெருமளவிற் படைத்தவர் இராமநாத வள்ளல்.

சைவத்துக்கும் கல்விவள ர்ச்சிக்கும் இப்பெருமகனார் ஆற்றிய தொண்டுகள அளப்பில. நாவலர் பெரு மானின் அரும்பெரும் சே வைகளை அரசியல் அவை யிற் பாராட்டிப் பேசிய பொழுது அவ்வுத்தமனாரை சைவர்களின் சீர்திருத்தச் சேனை முன்னணித் தலை வர் என விதந்த இராம நாத வள்ளல் பெண்மணி களுக்கு ஒரு கல்விக்கழகத் தை (இராமநாதன் கல்லூ ரியை) 1913 ம் ஆண்டில நிறுவிய தோடமையாது 1922 ம ஆண்டிற் பரமேஸ் வரக் கல்லூரியையும் தாபி த்தனர்.

சைவமங்கையர்சபையைத் தொடக்கி வைத்தவர் சைவ வித்தியா விருத்திச்சங்கத் தை நிறுவிய பெருமையும் இவருக்கே உண்டு.

யாழ்ப்பாணம் சைவபரி பாலனசபையின் மூன்றாவது தலைவராக விளங்கினர் இரா மநாதவள்ளல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## சைவசமயத்தின் தொன்மை

[பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்]

'சைவம்' என்ற மேன்மை பொருந்திய சொல்லே இந் நாளில் பெரிதும் தாழ்வடை யும் நிலையில் வந்துவிட்டதெ னலாம. இந்து என்ற சொல் 'இந்தியா' என்ற சொல்லினி ன்றும் தோன்றியதென்றும், இந்தியா என்னும் சொல், சிந்து என்ற நதியின் பெய ரின் விகாரமே என்றும் சொல்லப்பட் டிருக்கின்றது. இக்காலத்தில் "இந்துசமயம்" (Hindu Religion) என்று சொல்லும்பொழுது பெரும பாலார் அது சைவ சமயத்தை யேகுறிக்கின்றதென்று சொல் லுகிறார்கள். அவ்வாறாயினும் இந்துசமயம் என்ற அச்சொற் றொடர் உலகின் கண்ணுள்ள எல்லாச்சமயங்களையும அட ங்கியிருக்கிறதெனலாம். இப் பொழுது இந்தியாவில் மேற் கொள்ளப்பட்டிருக்கும் (வழ ங்குகிற) எல்லாச்சமயங்களும் வித்தியாசமான பெயர்களைப் பெற்றிருப்பினும் சைவசித் தாந்தத்தின் துண்டங்களே. சோபனமார்க்கமாகிய சைவத் தின் கீழ்ப்படிகளே. உலகத்தி லுள்ள எல்லாச் சமயங்களி லும் மிகப்புராதனமானதும் உலகத்தில் எல்லாத்தேசங்க ளிலும் வழங்கப்பட்டு வந்த தும் சைவசமயமே. சைவம சிவசமயம். சிவபெருமானே முழுமுதற்கடவுள். அவர் அருவாமாயும் அருவுருவமா யும் இருக்கிறார். அருவுருவ மாகிய சிவலிங்க வழிபாடே உலகம் முழுவதிலுமிருந்தது.

1. அதற்குச் சான்றுகள் (Indian Civilisation and its antiquity by M. Mukerjee, India)

2. இந்தியாவில் புதிய கற் கால குடியிருப்பு சிவலிங்க வழிபாடு கற்கால இறுதியி லும், உலோக கால ஆரம்பத் திலும், மொகஞ்சதரோவில், மக்கள் வழிபட்டனர். புதை

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்

---

## தருமத்தின் முதலாய் நின்றோன்

(1930 ம் ஆண்டில் சாவகச்சேரி ஸ்ரீமான் ச. பொன்னம்பல பிள்ளை இயற்றிய ஸ்ரீராமநாத மான்மியம் என்னும் நூலின்சிறப் புப் பாயிரத்திலிருந்து அநுவதிக்கப் பட்டவை.

செல்வனின் றந்தைமுனாட் செய்தசிவா லயப்பணியைச் சிறப்பினோ ங்கப
பல்வகைய சித்திரங்க ளணியுறநல் லுயரசிலையாற் பண்பி னுக்குந்
தொல்லமரர் புண்ணியப் பேறனையர்க்கிங் கமைத்திலதே சொல் லுங்காலை
நல்மளமார் பெருஞ்செயலு ளீதுபெருந் தருமமென நவிலலாமே.

—புலோலி பண்டிதர் பிரமஸ்ரீ ப முத்துக்குமாரசுவாமிக் குருக்கள

தன்றுதை ஏழிமுன்னோர் தாமுதித்த யாழ்ப்பரணத் தனிநன் னாட்டில்
இனறோன்று மிளமகளிர் கற்றறிவின் மீ தூர விடமபுந் தனபேர்
கினறோங்கு கழகமுட னிலைஞானாங கிலமபயில நிமலன் தன்பேர்
முன்றோனறு கலூரியுநன கமைத்துதவித தருமத்தின் முதலாய் நினறோன்

ஆங்கிலநாட் டரசிருந் தரசாளும் லண்டனக ரடைந்தி லங்கைத்
தேங்குறுகுஞ் சனங்களுக்கு வேண்டுவன பலமுறையுந் தோந்து தாமே
பாங்கினெடும் புரிதலினற் சுதேசநலத்தொண்டனெனப் பகர்சீ மானசோப்
பூங்குலவும் பட்டமினி துறும்ராம ராதனெனப் புகல்கோ யானே.

— புன்னாலைக்கட்டுவன் வித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையர்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்

---

## வையகம் துயர் தீர்கவே

சைவ நற் சிந்தனை
[இலங்கை வானொலியில் 26-3-73-ல் ஒலிபரப்பப்பெற்றது]

திரு. ச. அம்பிகைபாகன்

திருஞான சம்பந்த சுவா மிகள் பாண்டியனுக்கேற் பட்ட சுரத்தைத் திருநீற்றுப் பதிகம் பாடித் தீர்த்தார்கள். இதன் பின்னர் சமணர் சம பந்த சுவாமிகளை வாதத்து க்கு அழைத்தனர். இவ்வாதங் களை அனல வாதம், புனல் வாதம் எனபர். அனலவாதத் தில் தத்தம சமய உண்மை கள் எழுதப்பட்ட ஏடுகளை நெருப்பில இடுவதென்றும எவருடைய ஏடு நெருப்பில் வேவாது இருக்கிறதோ அவர் பக்கம் வெற்றி யென்றும் உடன்படிக்கை செய்து கொண்டனர், இவ்வாதத்தில் சமணருடைய ஏடு எரிந்து போக சம்பந்தசுவாமிகள் 'போகமார்த்தபூண் முலையாள்' என்னும் தேவாரத்தைக் கொண்ட ஏட்டை நெருப்பி லிட அது எரியாததினுல் வெற்றியடைந்தார்

அடுத்துப் புனல்வாதத்தில் ஈடுபட்டனர். இவ்வாதத்தில் சமணரும் சுவாமிகளும தத் தம் சமய உண்மைகளை ஏட் டில் எழுதி வைகையில் இடு வதென்றும் எவருடைய ஏடு நீருக்கு எதிர் நோக்கிச் செல்கிறதோ அவ்வேடே உண்மையான பொருளைக் கொண்டதென ஏற்றுக் கொள்வதாக உடன்பட்டுக் கொண்டனர். இதன் படி சமணர்கள் அத்திநாத்தி என எழுதிய ஏட்டை ஆற்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

---

### அன்பளிப்பு

ஸேர். பொன்னம்பலம் இராம நாத வள்ளலின் அழகிய நிழற் படம் இன்று நாவலர் ஆச் சிரம மண்டபத்தில் நிகழும் நினைவு விழாவில் 'மிலக் வைற் சோப் தொழிற்சாலை அதிபரால் இலவசமாக வழங் கப்படும்.

---

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பிரமாதீசஹு கார்த்திகைமீ கரு-உ வெள்ளிக்கிழமை [1973

# ஈழத்தில் சைவம் வளர்த்த இரு பெரியார்கள்

நமது நாட்டில் சைவசமயம் அன்னியருடைய ஆளுகை நடந்த காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் தோன்றிச் சைவ சமயத்தின் தொன்மையையும் பெருமையையும் தமது கண்டனங்களாலும் சமயப் பிரசார விளக்கங்களாலும் நமது சமயத்தைப் பாதுகாத்தனர். சைவ சமய விருத்திக்காக வித்தியாசாலைகளைத் தாபித்தனர். சைவ சமயப் பிரசாரத்தைப் புரிய சைவ சமய ஒழுக்கமும் விவேகமுமுள்ள பிரசாரகர்களை உற்பத்தி செய்தனர்.

சைவசமயப் பிள்ளைகள் விபூதி தரித்துக்கொண்டு கிறீஸ்தவ பாடசாலைகளில் விபூதியை யழித்துவிட்டுக் கல்விபயிலும் பரிதாப நிலையைக் கண்ணுற்று அவ்வித செயலைத் தவிர்ப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை கையாண்டார். நாவலரைப் போலவே சைவசமயத்தையும் தமிழருடைய கலாசாரத்தையும் பாதுகாக்க சேர். பொன்னம்பலம் இராமநாதன் தோன்றினார். அக்காலம் சைவசமயத்தையும் மக்கள்நலனையும் பாதுகாக்க தகுந்த உத்தமர் சேர். பொன்னம்பலம் இராமநாதனே யென்பதை யுணர்ந்து சட்டசபைப் பிரதிநிதித் தெரிவில் பிரதிநிதியாக வருவதற்கு அவருக்கு ஆதரவளித்தார்.

சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பாண்டித்தியத்தையும் சைவாபிமானத்தையும் மெய்ச்சினார். கிறீஸ்தவ மிஷனரிமார் சைவ சமயப் பிள்ளைகளுக்குச் செய்துவந்த அநீதியை நாவலரைப்போல அஞ்சா நெஞ்சராய்க் கண்டித்தார்.

1884ம் ஆண்டு பெப்பிரவரி 11ம் தேதி சட்டசபையில் கிறிஸ்தவமிஷனரிமார் அரசாங்க நன்கொடைபெறும் கிறிஸ்தவ வித்தியாசாலைகளில் கல்விபயிலும் சைவ சமயப் பிள்ளைகள் நிந்திக்கப்படுவதையும் அவமதிக்கப்படுவதையும் கண்டனஞ் செய்தனர்.

"சமயச் சகிப்பின்மை நமது நாட்டில் சைவசமயப் புனருத்தாரணஞ் செய்த பிரசித்திபெற்ற சீர்திருத்தவாதி மறைந்தபின் வேகமாக வளர்ந்துவருகின்றதென சேர். பொன்னபலம் இராமநாதன் சுட்டிக்காட்டினார்".

It appears that religious intolerance on the part of some of the managers has varied with varying times and circumstances, and that it has been steadily growing ever since the champion reformer of Hindus in the Northern Province died in 1879.

H. E. The Governor: Who did you say?

Mr. Ramanathan: The Hindu reformer named Arumukha Navalar.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைப்போல சைவப்பிள்ளைகள் சைவசமயச் சூழ்நிலையில் கல்விகற்க பெண்களுக்காக மருதையினார் மடத்தில் இராமநாதன் கல்லூரியையும், ஆண்களுக்காக திருநெல்வேலியில் பரமேஸ்வரக் கல்லூரியையும் தாபித்தார். துரதிஷ்டமாக அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியமயமாக்கிய பின் இரு பெரியார்களாலும் தாபிக்கப்பெற்ற பாடசாலைகளில் அவர்களுடைய நோக்கங்களுக்கு அமைவாகக் கல்வியூட்டப் பெருமை வருந்தத்தக்க நிலையாகும். அவர்களுடைய பாடசாலைகளில் அவர்களுடைய நோக்கங்களைப் பேணி அவற்றை நிருவகித்தல் அவ்விரு பெரியார்களுக்கும் மக்கள் புரியும் நன்றியறிதலாகும்.

இரு பெரியார்களுக்கும் எங்கள் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

## பொற்றமிழன் பெற்றி

— இறை ஒளி —

பொற்றமிழன் பெற்றிபெறப் பொன் இராம நாதனன்று
சொற்பெருக்காற் பேரவையிற் றொண்டாற்றிச் — சற்சமயக்
கல்விக் கழகமிரு கண்மணியாய் நாட்டினரால்
பல்வளம் கண்டதிப் பார்.

# யாழ்ப்பாணச் சமய நிலை

திரு. சி. முருகவேள் பி. ஏ. (சிறப்பு) அவர்கள்,
( நூலகர்: இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை )

## 1. வரலாற்றுப் பின்னணி

(முன் வளர்ச்சி 6)

இராமநாத வள்ளல் மிசனரிமாரால் வந்த ஆபத்து தனியே வெறும் சைவ சமயத்துக்கு மாத்திரம் வந்த ஆபத்து என்று கருதவில்லை; இவ்வாபத்து ஒரழகிய வாழ்க்கை முறைக்கு வந்த ஆபத்து என்று கருதியவர். கருதி அவ்வாழ்க்கை முறையின் அழகினை, கோயிலும் சுவாமியும், அடியவர்களும் ஞானிகளும், தந்திரமும் மந்திரமும், திருவிழாவும், ஆடலும் பாடலும், தாவணியும் சட்டையும், திருநீறும் சந்தனமும், உத்திராக்கமும், வேதமும் தேவாரமும், வடமொழியும் தென்மொழியும், தெய்வீகமாக இசைந்த அவ் வழகினை "ஏ! யாழ்ப்பாணமே! இதோ உன் சொத்து" என்று சொல்லிச் சிறிது காட்டியும் மறைந்தவர்.

இன்னொருவிஷயம். நாவலரும, இராமநாதனும் கிறிஸ்து பிரானைப் பற்றியோ அன்றி கிருத்துவ மதத்தைப்பற்றியோ இழுக்காகப் பேசியவர்கள் அல்லர்; இழுக்கு வரக்கூடிய முறையில் செயற்பட்டவர்களுமல்லர். மாறாக முன்னவர் கிறிஸ்தவர்களுக்காகப் பிபிலிய ஆகமத்தினைத் தமிழில் மொழி பெயர்த்தவர்; பின்னவர் அமெரிக்காசென்று கிறிஸ்தவர்களுக்குப் பிபிலிய வேதாகம உபதேசம் செய்தவர்.

வேற்றுமைகள் ஒற்றுமைகள் எவ்வாறிருப்பினும் வெற்றி தோல்விகள் எவ்வாறிருப்பினும் நாவலரும் இராமநாதனும் யாழ்ப்பாணத்தை நேசித்த எம் இரு பெருமக்கள். இவ்விருவருடைய திருப்பாத கமலங்களையும் உச்சிமேற்கொண்டு இக்கால யாழ்ப்பாணச் சமய நிலையினைக் கூறலுறுகின்றேன்.

(வளரும்)

# விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

திரு. சி. குமாரசாமி M. A. ஆசிரியர், மானிப்பாய்.

(முன் வளர்ச்சி — 2)

மேலும் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞான மேதையான அல்பேற் ஐன்ஸ்டைன் (Allbert Einstin) போன்றவர்கள் கடவுள் நம்பிக்கை யுடையவர்களாக விருந்தனர் அவரின் கூற்றுப் பின் வருமாறு சமயம் இல்லாத விஞ்ஞானம் முடமாகிறது விஞ்ஞானமில்லாத சமயம் குருடு விஞ்ஞானி யொருவன் ஒரு பொருளை ஆராயும் போது அவன் கடவுள் படைத்த எண்ணிறந்த படைப்புக்களின் ஒருசிறு திவலையையே ஆராயும் போது ஏற்படுகிற சிரமத்திலும் பல நூறுயிர மடங்கு வல்லமை பொருந்தியவர் இறைவன் என்று உணர்கிறான் என்று கூறுகிறார் ஐன்ஸ்டைன்

ஆகவே கடவுள் நம்பிக்கை அவசியம. கடவுளை அறிதற்கும் வணங்குதற்கும் அவனருள் வேண்டும் அவனருளாலே அவன் றுள் வணங்கி என்பது சிவ புராணம்.

ஆகையால், இளைஞர்கள் விஞ்ஞானத்துடன் மெய்ஞானத்தையும் அறிதல் வேண்டும். சமயத்தைப் புறக்கணித்தல் கூடாது. சமய வாழ்விலேயே தயை, இரக்கம், மனிதப் பண்பு, ஜீவகாருண்யம் போன்றன வளரும. அல்லாவிட்டால் விஞ்ஞான வலையிற் சிக்கி உலகம அழிய நேரிடும். பெரும் உலக சரித்திர மேதையாகிய ஆர்னல்ட் ரொயின்பீ (Arnold Toynbee) என்பவரின் கூற்றும் இதுவே!

### வாழும் முறை

மறந்தும்பிறனகேடு சூழற்கசூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன கேடு.

ஒருவன் மறந்தும் பிறருக்குத் தீங்கு செய்தல் கூடாது. அவ்வாறு தீங்கிழைப்பின் இறுதியில் அவனுக்கே தீங்குவிளையும்.

## அநுதாப உரை

'உடம்பை வளர்த்தேன்
உயிர் வளர்த்தேனே,
என்பது திருமந்திரம்.

சரீரோக்கியமே ஆன்ம வளர்ச்சிக்கு உறுதுணை வைத்திய விசாரதை கோளம் திருமதி டி. எஸ். ஜனககுமாரி அவர்கள் எண்பது ஆண்டு உயிர்வாழ்ந்து எண்ணிறந்த வைத்திய நூல்களை வெளியிட்டு உலோகோபகாரஞ் செய்திருக்கின்றார்கள் 6-10-73 ல் அவர்களின் பூத உடம்பு மறைந்தது. அவர்களின் புகழுடம்பு ஒருபோதும் மறையாது. அவர்கள் நூல்கள் ஒவ்வொன்றும் புண்ணிய பொக்கிஷம். போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம். விசாரதை ஸ்ரீ ஜனககுமாரி புண்ணிய லோகங்களில் பெருமகிழ் வெய்தி ஆத்ம சாந்தி உறுவராக என்று திருவருளைப் பிரார்த்திக்கும் முகமாக எமது ஆழ்ந்த உளங்கிழ்வை அவரது குடுபத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மில்க் வைற்,
க. கனகராசா

## சைவ சமயத்தின்

(1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

பொருள் ஆராய்ச்சியில் கண்ட உண்மை.

3. (Westropp) 'உவஸ்றொப்' என்னும் மேல் நாட்டறிஞர் உலகமுழுவதிலும் சிவலிங்க வழிபாடு இருந்ததென அத்தாட்சிப்படுத்துகின்றார்.

4 சீனு, ஜப்பான் பசுபிக் கடலிலுள்ள தீவுகளில் சிவலிங்கங்கள் இருக்கின்றன.

5. ஆபிரிக்காவிலும் அமரிக்காவிலும் சிவலிங்க வழிபாடு ஒருகாலத்தில் பரவியிருருந்தது. இப்பொழுதும் கனடாவிலும், மத்திய அமரிக்காவிலும் சிவலிங்கங்களும் விநாயக உருவங்களும் இருக்கின்றன.

6. சில வருஷங்களின் முன் கிறீஸ்து வேதம் வந்துள்ள அசீரிய, யூதேய, சீரியா, சின்ன ஆசியா, பபிலோனியாவில் சிவலிங்ககங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

7. எகிப்தின் (Egypt) சில பகுதிகளில் ஹோம, ஓரஸ், இஸ்ரஸ் சராபிஸ் என்னும் பெயரால் சிவன் வளங்கப்பட்டார். பாம்புகளும் புலிகளும வளங்கப்பட்டன. எகிப்திய கூர்நுதிக்கோபுரச் (pyramids) சுவர்களில் சிவலிங்கங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. பழைய ஐரோப்பா கிறிஸ்துவ குருமார் சிவலிங்க வழிபாட்டிற்கு எதிர் முயற்சிகள் செய்தனர்.

8. (Greece) கிரேக்கதேசம் விஜா (Viza) என்னும் இடத்தில சிவலிங்கத் தொடர்புடைய கிரியைகள் (ceremonies) இன்றும் நடைபெறுகின்றன.

9. (Ireland) அயர்லாந்து கிறிஸ்த கோயில்களில் (in churches) சிவலிங்கங்கள்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## சைவ சமயத்தின்...

(2-ம் பக்கத்து வளர்ச்சி)

காணப்படுகின்றன. அவை Shella nagio) என்று வழங்கப்பட்டன.

10. (England&Scotland) இங்கிலாந்து ஸ்கொத்லாந்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர் சிவலிங்கங்கள் (Roman's) ரோமர்களின் கோட்டைகளிலும் மாளிகைகளிலும் இருந்தன.

11. (Germany&France) ஜேர்மனி பிரான்சு தேசங்களில் இவ்வழிபாட்டிற்குச் சான்றுகளிருக்கின்றன.

12. (Italy) இத்தாலி தேசத்தில் சிவலிங்க வழிபாடு 14ம் நூற்றாண்டு வரையில் நடந்துவந்து பின் கிறிஸ்துவ மதம் தழுவப்பட்டது.

13. (Tibet & Bhutan) திபெத்து புதனத்திலும் சிவலிங்க வணக்கம் காணப்படுகின்றன.

14. (Japan)InShintoism ஷிந்தோசியம் என்னும் ஜப்பனிய மாதத்தில் சிவலிங்கம் முதன்மை பெற்றுள்ளது.

15. (America) சிறப்பாக மெச்சிக்கோ (Mexico) பீரு (Peru) ஹெயித்தி (Haifti) இத்தேசங்களில் சிவலிங்கம் வழிபடப்பட்டது.

16. (Spain) ஸ்பானியர் முதன் முதன் ஆபிரிக்கா சென்றபொழுது கோயில்களில் சிவலிங்க வழிபாட்டைக் கண்டார்கள். Africa ஆபிரிக்காவில் (Lingba) என்னும் பெயரால் சிவலிங்கம் வழிபடப்பட்டது.

Greece Dionyous (Baccus) வழிபாடுகளில் சிவலிங்க வணக்கம் காணப்பட்டது. வீதியில் உலாக்கொண்டு செல்லப்பட்டது 'பாக்கஸ்' வழிபாடு இத்தாலியில் பிரபலமாயிருந்தது. பக்கஸ் 'எபின்' அல்லது 'கப்பானியா' என்னும் பெயரால் வழிபடப்பட்டது. எபின் எபி (Hebi) கௌரி என்னும் தேவியும் வழிபடப்பட்டது.

புலியும் இடபமும் 'பங்கஸ்' கடவுளுக்கு மிகப்பிரியமானவை. அது புலித்தோலை உடுத்து கையில் திரிசூலத்தை வைத்திருந்தது. 'எபினேச்' சிவனென்றும் எபியைக் கௌரி என்றும் கூறலாம். பக்கஸ் கடவுள் கையில் அருந்தும் மண்டையும் (கபாலம்) இருந்தது. (Asia minor) ஆசியா மைனரில் (சின்ன ஆசியா) லிங்கக் கடவுள் (Moloch) மொலச், மெரகொக், ஆதோனியிஸ், சபாசியஸ், பாக்காஸ், பாகேதஸ் என்னும் பெயர்களால் வழிபடப்பட்டது.

'Westropp' என்பவர் 'ஆதோனியிஸ்' என்பது 'அர்த்தநாரீசுவரர்' என்று ஆராய்ந்து காட்டியுள்ளார்.

(In Egypt) எகிப்தில் சில காலத்தின் முன் "தூர்க்கம்மா" என்று அடியில் எழுதப்பட்ட ஒரு தூர்க்கையுருவம் கண்டுபிடிக்கப்பட்டது.

---

அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் நிகழ்ந்த

# :-: கவியரங்கம் :-:

## அப்பரின் அன்புள்ளம்

முன் வளர்ச்சி —8

[செஞ்சொற்கொண்டல். கலாநிதி. சிங்காரவேலன் அவர்கள்]

முன் மொழி

நடராசர் அம்பலத்தின் நாயகனார் ஆதலினால்
நடராசர் தலைமையிந்த நல்லரங்கின் மிகப்பொருந்தும்;

ஐந்துதொழில் செய்வார் ஆனந்த நடராசர்;
உய்ந்து எழில் தருவார் நம்மருமை நடராசர்!
முயலகனைக் கீழ்ப்படுப்பார் மூதறிவின் நடராசர்;
முயற்சியிலாச் சோம்பரினை முறித்திடுவார் நடராசர்;

யோக சுவாமியாய் அருள்தருவார் நடராசர்!
யோக சுவாமிபுகழ்க் கவிதருவீர் நடராசர்!
மாணிக்க வாசகனார் மலர்ந்ததமிழ் கேட்பார்;
ஆணப்பொன் னுங்களிற்றுப் படியாரைக் கேட்டிருப்பார்;

தில்லைநடராசர்; திருவார் யாழ்ப் பாணத்தின்
எல்லைநடராசர் இவர் எந்தம் கவிகேட்பார்?
தலைமை தனையேற்றுத் தனிவணக்கம் கூறியிந்த
நிலையிற் கவிபாட நேர்கின்றேன்; வாழியிவர்!

பாட்டெழுதும் போதெல்லாம் பக்கத்தே நின்றிருந்து
கேட்டிருக்கும் மாமுருகா! கேட்டாயோ? — பாட்டரங்கில்
நாவரசர் அன்புளத்தை நான்உரைக்கக் கூடுவதோ?
ஆவலாய் வந்தேன் அருள்!

வேழமெனுங் கல்வி விளங்குகின்ற வித்தகரே!
ஈழத் திருமண்ணின் இணைந்தோரே! தாய்க்குலமே!

சைவமா நாட்டுச் சான்றோரே! நல்லருளின்
தெய்வமாத் தொண்டில் திளைக்கும் சபையோரே!
கைகூப்பி என்றன் கனிவாம் வணக்கத்தை
மெய்யாகச் சொல்லிடுவேன்; மேலோரே ஏற்றிடுவீர்!

நாவன்மை மிக்க நல்லறிஞர் பண்டிதனார்
பாவன்மைப் பின்னிப் பாட்டமைத்த பந்தலிலே
வேலன் கவிகள் விரைந்திடுமோ? என்றாலும்,
கோல மயிலிற் குதித்தோடுந் தன்னடியார்

கூவி யழைக்க குளிர்ந்துவிடும் மாமருகன்
ஏவி நிகழ்த்துகினற என்பாட்டும் ஏற்றிடுவீர்!
யாரிந்த நாவரசர்? யாரிந்தத் தொண்டுகிழம்?
யாரிந்தச் செந்தமிழின் காவலராம் பாவலனார்?

ஆற்றுக்கு மூலம் அளந்தறியாப் பெருமலையாம்;
காற்றுக்கு மூலம் கணித்தறியார் இன்றுவரை;
பாலுக்கு மூலம் பசுவன்றோ? கூர்மையுள்ள
வேலுக்கு மூலம் வினைதீர்க்கும் மாமுருகன்;

எடுத்தால் இதயத்தே இடம்பிடிக்கும் வாயாரத்
தொடுத்தால் எலும்புருக்கி மனங்கரைக்கும்; இவர்பாடும்
பாட்டுக்கு மூலம் பரமபொருளின் கருணையென்பேன்!
நாட்டுக்குள் நாவரசர் நாட்டிவிட்ட அன்புநெறி.

சொல்லவும் கூடுமோ? சூழ்நெறி மற்றிதனை
வெல்லவும் கூடுமோ? வேங்கை சிறு நரியால்
தாக்கிடவும் போமோ? தாமரையைச் சிறுமுல்லை
போக்க யெதிர் நிற்கக் கூடுவதோ! சான்றோரே!

அப்பரின் பாட்டோ அருட்பாட்டு; வையத்தே
கப்புகின்ற பேரிருட்டைக் களையவந்த திருப்பாட்டு!
நீற்றறையி லிட்டாலும் நெடுங்கடலிற் போட்டாலும்
மாற்றறியாப் பேரன்பு மன்னவனார் சீர்ப்பாட்டு!

நஞ்சோடு பால்கலந்து நயமில்லார் அளித்தாலும்
கொஞ்சமும் உள்ளத்துக் கோபமின்றி மலர்ச்சியொடு,
"நஞ்சும் அமுதாமெங்கள் நாதனடியார்க் கென்று
கொஞ்சு தமிழாற் பேசிக் குடித்தவரின் திருப்பாட்டு!
தீயமணர் சூழ்ச்சித் திறமெல்லாம் கண்டாலும்
போயொருசொல் சாபமெனப் புகுந்ததுண்டோ அவர்வாயில்?
"நன்றே நலமில்லாத் தீயதோ நாயகனார்
அன்றே பொறுப்பென்றே அமைந்திருக்கும் அப்பருளம்!

(அடுத்த இதழில் வளரும்)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு

வழ. இல: M. B. 12414

கட்டுடை மானிப்பாய் 1. மாணிக்கம் நடராசாவும் பெண்
2. விரதசிரோன்மணியும் —வழக்காளிகள்

எதிராக

கொக்குவில் கிழக்கு பொன்னம்பலம் சின்னத்தம்பி கைம்பெண் சரஸ்வதி (காலஞ்சென்ற கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம் பொன்னம்பலம் சின்னத்தம்பியின் ஆதனத்துக்கு தானுகவும் தத்துவகாரியாகவும்) —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12414 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1974ம் ஆண்டு தை மாதம் 16-ம் திகதி (16-1-74) புதன்கிழமை காலை 10-30 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 8980/-ம் 31-3-71 தொடக்கம் 13-7-72 வரைக்கும் ரூபா 5000/ க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 488- 60 சதமும் செலவில் ரூபா 200/ கட்டப்பட்டுள்ளது.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் பகுதியும் டிஸ்திறிக்கும் நல்லூர் கோயிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை தொட்டான் தோட்டம் (Tottan Thoddam) நி. ப, 4¾ ம் கல் வீடும் பயிர்களும் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் மேற்கெல்லைக் காணிக்குத் தெற்கெல்லையிருக்கும் கிணற்றில் தண்ணீர்பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரிமையும் இந்த நி. ப. 4 ¾க்கு எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை மேற்கு சதிரிப்பிள்ளை விசுவரத்தினத்தின் ஆதனம் தெற்கு கனகசபை கனகரத்தினத்தின் ஆதனம இதிற்சொர்யலாய் அரை ½ பங்கு மற்ற அரைபங்கு 5709 இலக்க பத்திரப் படி விடுவிக்கப்பட்டுள்ளது யாழ்ப்பாணம் காணிப் பதிவுக் கந்தோரில் D 271/121ல பதியப்பட்டது

மல்லாகம். செ. பாண்டித்துரை
28-11-73. 273 30-11 கொமிஷனர், விலைமதிப்பாளர்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு

இராசாவின் தோட்டம் றோட்டு யாழ்ப்பாணம்
M. P. S. உருத்திரராசா —வழக்காளி
இல: M B 11182 எதிராக
பலாலி றோட்டு, யாழ்ப்பாணம் வைரவி மார்க்கண்டு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11182 ம் இலக்க வழக்கில எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பினனால் விபரிக்கப்படும் ஒரு துணடுககாணி 1974 ம் ஆண்டு தை மாதம் 12ந் திகதி (12-1-74) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில எனனால் விற்கப்படும்.

தீாவைத் தொகை: ரூபா 3570/-ம் 15-10-69 தொடக்கம் 25-2-70 வரைககும ரூபா 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தீாவைத் தொகைக்கும் பணம முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வடடியும கோட்டுச் செலவு ரூபா 269-11 சதமும்.

### ஆதன விபரம்

வடயாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் வண்ணார்பணணை கோயிற்பறறு வண்ணாபணணை தெனகிழககிறை "மாணிக்கன்காடு" நி. ப. 2 ஆனால உத்தரவு பெற்ற உலாந்தா S. ஏகாம்பரததால் 13-3-63 ல தயாரிககபபட்ட படததினபடி நி. ப 2 குளி 01, 7/10 இதில் 2ம துண்டான நி. ப. 0 குளி 15, 6/10 இந்த பிரிககப்பட்ட துணடு நி. ப. 0 குளி 15, 6/10ம வீடும செய்பயிர் வானபயிரும மற்றும் உடமைகளும். இநதக் காணியில வடகிழக்கு மூலையிலிருககும் கிணற்றல பங்கும். எலலை கிழக்கு ஷெ படத்திலுளள 3ம துண்டான 06, 5/10 குளி கொணட பொது ஒழுங்கை, வடக்கு ஷெ படததிலுள்ள 1ம துண்டான கணபதிப்பிளளை கண்ணப்புவன ஆதனம, மேற்கு கநதையா பெண் பூரணம, தெற்கு பொன்னமபலம பெண சரஸ்வதி. இதடங்கலும அததுடன ஷெ படத்திலுள்ள 3ம் துண்டான ஒழுங்கையால போகவும வரவும உளள உரிமையும். D 299/20-ல் பதியப்பட்டது.

செ. பாண்டித்துரை

மலலாகம்- கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
28-11-73 Commissioner of Sales & Valuer
274 30-11-73

---

## அடைவு நகை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன் இலகடி காரைநகர் வடக்கில் அடைவு பிடிக்கும் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களின் அடைவுகடையில் 1971 ம் ஆல் ஆனி மாதம் 12-ம் திகதி தொடக்கம் 1972 ம் ஆல் புரட்டாதி மாதம் 1-ஆம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் அடைவு நகைகள் யாவும் என்னால் 1974 ம் ஆல் தைமாதம் 5 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் ஷெ அடைவு கடையிலிருந்து பிரசித்த ஏலத்தில விற்கப்படும்

வை. ஏரம்பமூர்த்தி

காரைநகர். 20-11-73 ஏல விற்பனையாளர், விலைமதிப்பாளர்.
எம். 268 23, 30 —73

---

**மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.**

பிரமஸ்ரீ சீதாராமசாஸ்திரிகளின்

## தொண்டு

[அண்மையில் நல்லூரில் நிகழ்ந்த வண்ணை நகர் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. சி. சீதாராம சாஸ்திரிகளின் மணி விழாவில் 'கலைமகள்' ஆசிரியர் கி. வ. ஜகநாதன் ஆற்றிய சிறப்புரையின் ஒரு பகுதி]

ஒரு சேரப் பார்க்கும் தன்மையால் சாஸ்திரியாரும் நானும் சகோதரர். முருகனை வழிபடும் எண்ணம் நம்பிக்கையால் நாம் இருவரும்சகோதரர். தமிழ் நாட்டில் பிறந்த சாஸ்திரிகள் யாழ்ப்பாணம் வந்து புகழ் என்ற பெண்ணை மணந்து கொண்டார். இதனுல் தமிழ் நாட்டவனுன நான் பெருமைப்படுகிறேன். வாழ்கவாழ்க யாழ்ப்பாணம் வாழ்க சீதாரமசாஸ்திரிகள் என்று வாழ்த்துகின்றேன். படிப்பும் பணிவும் நிறைந்தவர் சாஸ்திரிகள்.

"கடவுள் இல்லை வேதம் இல்லை" என்போர் கூற்றை நம்பாதீர்கள். வேதத்துக்கு அனுதி என்று பெயர் உண்டு. அனுதி அந்தணனை பரமசிவன் ஆதி அந்தணனை பிரமாவுக்கு உபதேசித்தார். அவர் மூலம் அவாந்தர அந்தணர்கள் வேதத்தை ஓதுகின்றனர் இராமாயணத்தில் யுத்த காண்டத்தில் யுத்தம் நடக்கிறது. ஏனைய காண்டங்களிலும் யுத்தம் நடக்கிறது பாடபேத யுத்தம் நடக்கிறது. ஆனுல் வேதத்தை அட்சரம் சுருதி தவருமல் பாரத நாட்டில் எப்பகுதியில் வாழும் அந்தணரும் ஓதுகின்றனர்.

இது ஒன்றே வேதம் இறைவனுல் அருளப்பட்டது என்பதற்குப் போதுமானது. காஷியர் பணம் அல்லர்: பணத்தைப் பாது காப்பவர் அது போல வேதத்தைப் பாதுகாப்பவர் பிரமாணர் அந்தணர் என்னாரும் வேதமோதினுர்கள் என்று சங்க இலக்கியங்களில் பேசபடுகின்றது பிராமணர் எல்லாரும் வேதகானஞ் செய்ய என்கின்றது பத்துப்பாட்டு கங்காப்பிரவாகம் போன்றதுவேதம். வைதிகசைவம் என்பது தான் எங்கள் சமயத்தின் பெயர் இந்துசமயம் என்று வெள்ளைக்காரன் பெயர் வைத்தான்.

செல்வம் படைத்த வீடென்றுல் அங்குள்ள ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கு விருப்பான உணவு பறிமாறப்பட வேண்டும் அது போலவே ஒவ்வொருவருக்கும் அவரரவர்க்கு விருப்பாமான உருவில் ஆனைமுகனுக, ஆறுமுனுக இன்னும் பலவாருக ஆண்டவன் எங்கள் சமயத்தில் இருக்கிறுர் அதாவது பல உருவங்களில் ஆண்டவனை நாம் வணங்குகின்றோம்

சமயத்துறையிற் கூட தனித்தமிழில் பேசவேண்டும், எழுதவேண்டும் என்கின்றனர் அப்படியாயின் ஸ்ரீ ருத்திரம், பஞ்சாட்சரம் சடாச்சரத்துக்கு எங்கே போவீர்கள்? வடமொழி வேண்டாம் என்பது உடல் வேண்டாம் உயிர் வேண்டு என்பதைப் போன்றது. எம்பெருமான் வடமொழி தென்மொழி இரண்டுக்கும் மூலகாரணர். (கு. ப.)

## வையகம் துயர் தீர்க

(1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

றில் இட்டனர். அது கடலை நோக்கிச் சென்றது.

பின்னர் சம்பந்த சுவாமிகள் சைவசமய உண்மைகளை எல்லாம் விளக்கும் 'வாழ்க அந்தணர்" என்னும் அருமைத் திருப்பாசுரத்தை ஏட்டில் எழுதி தமது திருக்கரத்தினுல் வைகை ஆற்றில் இட்டனர். இவ்வேடு நீலை எதிர்த்துச் சென்றது அத்தத்துவங்களையுணர்ந்த மனமானது புலன்வழிப்போகாது அதனை எதிர்த்துச் செல்வது போல் சென்றதென சேக்கிழார் வர்ணித்துள்ளார்.

திருப்பாசுரத்தின் சிறப்பை சிவக்கவி மணி C.K. சுப்பிரமணிய முதலியார் பின்வருமாறு கூறியுள்ளார். "இத்திருப்பதிகம் பன்னிரண்டு திருப்பாட்டுக்களைக் கொண்டது. சிவாகமங்களின் ஞானபாத முடிபாய்ச் சிவஞான போதத்துள் வடித்தெடுத்துக் காட்டப்படும் பன்னிரண்டு சூத்திரங்களின் கருத்துக்களையும எடுத்துக் காட்டும் சிறப்பினையுடையது. பொது, சிறப்பு என்ற இருதன்மைகளைக் காட்ட முதன் மூன்று பாட்டுக்கள் ஒரு யாப்பும் சந்தமும் ஆகவும் ஏனையவை வேறு யாப்பும் சந்தமுமாகவும் இரு பிரிவாயமைந்த சிறப்புடையது இவ்வாறிரண்டியலின அமைந்த திருப்பதிகம் இஃதொன்றேயாம."

இத்திருப்பாசுரத்துக்கு சேக்கிழார் சுவாமிகள் 22 பாட்டுக்களில் விரிவான விளக்கம்கொடுத்துள்ளார் இங்கு வாழ்க வந்தணர் என்னுந் திருப்பாட்டுக்கு கொடுத்த விளக்கத்தைச் சிறிது கவனிப்பாம். அந்தணர் வானவர் ஆனினம் வாழ்க எனப் பாடியதன் காரணம் வேள்வி அர்ச்சனை வழிபாடு முதலியன தடைபடாது நடைபெறுதற் பொருட்டே. அந்தணர் வேள்வி பூசை முதலிய வற்றைச் செய்வதினுல் அவர்களை முதலிலும் அவற்றின் பயனை மக்களுக்குக் கொடுத்தலினுல் தேவர்களை அடுத்தும் பூசை முதலியவற்றுக்கு வேண்டுவனவற்றைக் கொடுத்தலால் ஈற்றில் பசுவினத்தையும் பாடினுர்.

"வீழ்க தண் புனல்" என அடுத்துப்பாடியதன் காரணம் வேள்வி பூசை முதலியவற்றின் பயனுக வரும் மழை தினந்தோறும் சிவார்ச்சனைக்கு றுப்பாயிருப்பதினுலாகும் அரசனை வாழ்த்தியதன் காரணம் வேள்வி அர்ச்சனை முதலியவற்றைத் தவருது நடக்கும்படி செய்வதினுல்.

"ஆழ்கதீய" தென்பதன் பொருள் தீய நெறிகளெல்லாம் அழிய வேண்டு மென்பதே. "எல்லாம் அரன் நாமம் சூழ்க" வென்றதன் பொருள் எல்லாவிடங்களிலும் சிவபெருமானுடைய திருநாமம் பரவ வேண்டு மென்பதே. "ஆழ்கதீயதெல்லாம்" எனக் கூட்டிப் பொருள் கொள்வது பொருத்த மற்றது என்பது இங்கு கவனிக்கத் தக்கது.

வையகமும் துயர்தீர்கவே எனப்பாடியதன் கருத்து உலகத்திலுள்ள உயிர்கள் இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் ஏற்படக்கூடிய துன்பங்களின் னின்றும் நீங்கி வாழவேண்டும் மென்பதே

இத்தேவாரம் சைவசமயத்தின் உயர்ந்த கொள்கையை நன்கெடுத்துக் காட்டுகின்றது இக்காலத்து மிகவும் பேசப்படும் சர்வோதயக் (எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டு மென்னும்) கொள்கை இப்பாட்டால் நன்குவிளக்கப்பட்டிருக்கிறது: மேன்மைகொள் சைவநீதி என்பது எல்லோரும் இன்புற்றிருக்க வழிவகுக்கும் நீதியாகும்.

எம் நன்மையைக் கருதியும் உலக நன்மையைக் கருதியும் இவ்வருமைத் தேவாரத்தை நாம் தினந்தோறும ஓத வேண்டுமெனப் பெரியோர் கூறுவர்.

## தருமத்தின் முதலாய் நின்றேன்

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

காடெல்லாம் வயலாக்கி நாடெல்லாம் பசிநீக்கிக் கவின்று
நெஞ்சின்
ஊடெல்லாங் கலைபடிந்த அருட்சோதி விளக்கேற்றி
ஒன்றைப் போற்றி
ஏடெல்லாம் பாட்டாக்கிப் பாட்டெல்லாந் தானபொருளாவிருந்
தொளிர்ந்து
கூடெல்லாம் எடுத்தபயன் உயிர்கொள்ளத் தவம்புரியும்
கோமான்றனே.

படிக்காத நூலில்லைப் பேசாத அவையில்லைப் பகருஞ் சொல்
மடுக்காத காதில்லைப் புகழாத நாவில்லை மலர்ந்து நெஞ்சங் [தேன்
கொடுக்காத கொடையில்லைக் கும்பிடாத் தேவுமில்லைக
கூர்ந்து பார்த்தும்
வடுக்காண வொண்ணுத திருநாம நாதனவன் வாழி மாதோ.

—பிரம்மஸ்ரீ க. சு. நவநீதக்கிருஷ்ண பாரதி

மன்னவையி லொருமணியாய் மருவலர்தம் வயமிழக்க
மழைபெய் மேகந்
தன்னிகர்பன் னூலுரைகள் தந்தகட லத்துவித சைவ ஞானி
எந்நலமும பிறநலமா எவ்வுயிருந் தன்னுயிரா எண்ணும மேதை
பொன்னனியல்சேர் பொன்ராம நாதனெனும புரவலர்கோன்
புகழ்மிக் கோனே,
என்னனைய மாணவருக் கிலக்கணலக் கியங்களெலா மியம்பு
மாசான்,
தன்னிகர்சா வகச்சேரித் தலர்புகழ்சங் கரப்பிள்ளை தந்த செம்மல
பன்னியநா வலர்கல்விப் பரம்பரையோன் நூலுரைகள் பலமுன்
செய்தோன்.
பொன்னிகர்பொன் னம்பலவன் சைவநெறி பயின்ற தமிழப்
புலமையோனே.

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

## திருக்குறள் THE GREAT KURTV

### பொருட்பால்

[அமரரான யாழ் / நல்லூர் சிவபகதமாமணி திரு. ச. சூரசங்காரன் L. L. B (London) நீதிதுரந்தரர் எழுதிய "திருக்குரள் உரைத் தொகை" என்னும் நூலிலிருந்து எடுககபபட்டது. — ஆசிரியர்

அதிகாரம் 75 அரண்
குறள் 746 (முற்றொடர்- 41)

முற்றிய முற்று தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய -தரன்.

1 போக்குவரவு இல்லாதபடி நெருங்கி முற்றுகைசெய்தும், அவ்வாறு முற்றுகை செய்யாது தளர்ச்சியுற்றஇடம் பார்த்துக் திடீரெனத் தாக்கியும் வஞ்சனையால் கீழறுத்து வாயிற்கதவைத திறப்பித்தும் பகைவரால் கைப்பறறமுடியாத அருமை உடையதே அரணுகும்.

1 That is a veritable fortress which is impossible to capture by such regular seige as would prevent anyone going out of or going in to the fortress or by a sudden attack at some vulnerable point or by undermining and having its doors opened by treachery.

2 பகைவர் முற்றுகையிட்டுச் சூழ்ந்தும், முற்றுகையிடாது ஒருமுகமாகப் போர் புரிந்தும, பூமியில் சுரங்கமுண்டாக்கி கைப்பறறமுடியாதபடி அமைவதே அரணுகும்.

முற்றியும் என்பதற்கு முற்றுகையிட்டாலும் என்றும் முற்று தெறிந்து என்பதற்கு நெருங்க முடியாதபடி பகைவர்களை ஓடச்செய்து என்றும் உரைகாண்பாரும் உளர். மறைப்படுத்தும் எனப்பிரித்து அதற்கு உள்ளிருக்கிறவர்களைப் பகைவர்கள் காணமுடியாதபடி மறைவிடங்கள் உள்ளதும் என்றும் அவர் உரை செய்வர். அறைப்படுதல் —கீறுபடுத்தல், பூமியிற் சுரங்கம் செய்தல் கீழறுததல் —எதிரிபடையினரை வஞ்சித்துத் தமக்கு உதவச் செய்தல்.

2 That is the veritable fortress which cannot be captured by the enemy by seige or by storm or by the laying out of an underground passage.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

## அனைவரும் நேசித்த அழகக்கோன்

1956 முதல் மன்னுர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்த திரு வி. ஞ. அழககோன் 26ம் திகதி அன்று இயற்கையெய்தினுர். அன்னுரின் மறைவு தமிழபேசும மககளுக்கு ஓர் பேரிழப்பாகும்.

தேசிய அரசுப பேரவையில் சகல கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்கள் அன்னுரின் மறைவை யொட்டி ஆழ்ந்த கவலை தெரிவித்தார்கள். இந்து, முஸ்லிம், கிறிஸ்தம, பௌதத மதத்தவா களின் அன்பைப பெற்ற பெரியார் இவர்.

## சென்னையில் மாணவர் ஆர்ப்பாட்டம்

பாரத கண்டத்தில் மாணவர் மத்தியில் ஓர்பதடட நிலை கடந்த சில ஆண்டுகளாக நீடித்து வருகின்றது. நேற்றைய தினமும் (29-11-73) தமிழ நாட்டின் தலை நகரில் மாணவர்களுக்கும பொது மககளுக்குமிடையில மோதல நடைபெறறது. இதன் காரணமாக செனனையில உள்ள பல பலகலைக் கழகக் கலலூரிகள் மூடப்பட்டன. இம மோதல் தொடாபாக நீதி விசாரணை ஒன்று நடத்துமாறு மாணவர்கள் தொடர்ந்து ஆர்பபாட்ட ஊர்வலம நடத்தி வருகிறுர்கள்.


கோட்டு ஏறபனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழக்கு. இல. M B 10542
வட்டுககோட்டை மேற்கு
பொன்னுச்சாமி வரதருஜா
—வழக்காளி

எதிராக
வண்ணுர்பணணை யாழுப்பாணம்
1. செட்டிநாதா செட்டியார்
சோமசுந்தரம 2. பெண சரஸ்வதி
யமமா

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட் M.B. 10542ம இலகக வழக்கில எனககுக் கிடைதத கோட்டுக கட்டளைப்படி பினனுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1973-ம ஆணடு மாரகழி மீ 28 ம் (28-12-73) வெளளிக் கிழமை முற் பகல் 10.00 மணிககு முதலாம காணியும 10-30 மணிககு இரண்டாம காணியும் அந்தந்தக் காணிகளுக்குள நின்று பரசிதத ஏலத்தில எனனுலவிறகபபடும.

தீாவைததொகை: முதல் வட்டி ரூபாய் 1000/- ம 18-1-62 தொடக்கம் 31-5-70 வரைக்கும் 10 வீத வட்டியும அதறபின முழுத்தொகைககும இறுக்கும் வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபாய் 125/ம கொமிசனுககு ஒட்டிய முத்திரைச் செலவு ரூபா 9/-

ஆதன விபரம்

வடமாகணம் யாழ்ப்பாணம் டிஸதிறிக் காச்சி பிரிவு காச்சி கோயிறபறறு பிராமணன வயல் மறு பிரிவுகளும பா. நெல, இலா 129 குளி 10½ இதறகெல்லை கிழக்கும தெற்கும கிழசொலலப்பட்ட இரணடாம காணி மேற்கு வாய்ககால் வடக்கு சின்னததம்பி கணபதிப்பிள்ளைககுரிய வாதனம பதிவிலக்கம் L 7/92

ஷெயூர் பிராமணன்வயல் மறு பிரிவுகளும் பா. நெல் இலா 100 குளி15 இதறகு கெல்லை கிழககும வடககும வாய்ககால் மேறகு ஸரஸ்வதி தமபிப்பிள்ளை பெண்ணுககுரியவாதனம தெற்கு மேற்சொலலப்பட்ட காணி பதிவிலக்கம் L, 7/93

அ. போ. எதிர்மன்னசிங்கம்
கொமிஷனர், விலைமதிப்பாளர்
14டேவிட் ரோட் யாழ்ப்பாணம்
17-11-73 275 30-11


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலககத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 30—11—1973 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்